1972 சனவரி 29]

சிறப்பான முறையில் நடைபெற்று வருவதாகவும், அங்கே 350 மாணவர்கள் படிக்கிறார்கள் என்றும் தெரிகிறது. ஆனல் இந்த ஊராட்சி ஒன்றியத்தினர் கல்வி இலாக்காவின் அனுமதி இன்றியே அனந்தல் கிராமத்தில் ஒரு கட்டிடத்தைக் கட்டி குளத்தூரில் ஆரம்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட பள்ளியை இங்கே மாற்றியிருக்கிறார்கள். இந்தக் கட்டடத்தில் 76 பேர்களேதான் படிக்க வசதியும் இருக்கிறது. ஏற்கனவே தனியார் பள்ளியோ, ஊராட்சி ஒன்றியப்பள்ளியோ நடக்கிற இடத்தில் இருந்து 1 மைலுக்குள்ளாக வேறு ஒரு பள்ளியை அங்கீகரிப்பது இல்லை என்ற முறைக்கிணங்க இந்தப் பள்ளி அங்கீகரிக்கப்படவில்லை.

திரு. கே. ஏ. வகாப் : அந்தத் தனியார் பள்ளியில் 350 பேர்கள் படிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அந்தப் பள்ளியைப் போய்ப் பார்த்திருக்கிறேன். அவ்வளவு குழந்தைகள் படிக்கவில்லை. மேலும் அந்தத் தனியார் பள்ளி சாதாரண கீத்துக் கொட்டகையில்—அதுவும் கீழே மணல்—சுகாதார வசதியற்ற இடத்தில் நடக்கிறது. பஞ்சாயத்து யூனியன் சார்பில் கட்டப்பட்ட பள்ளி பக்கா கட்டடம். ஆகவே, மாணவர்களுடைய சுகாதார வசதி, மற்ற வசதிகளைக் கருதியாவது இந்தப் பள்ளிக்கு அரசு அங்கிகாரம் அளிக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன் : என்னிடத்தில் தரப்பட்டுள்ள தகவல்படி தனியார் பள்ளியில் 350 பேர்கள் படிக்க இடமிருக்கிறது, இந்தப் பள்ளியில் 76 குழந்தைகளுக்குத்தான் இடமிருக்கிறது என்பது ஆகும். மேலும் பஞ்சாயத்து யூனியன் கட்டடம் சரியானதாக இல்லை, ஒழுக்கல் உள்ளதாக இருக்கிறது என்பதாகும். அதோடு கல்வி அதிகாரியின் அனுமதியின்றி குளத்தூரில் துவக்க அனுமதிக்கப்பட்டதற்கு அங்கே ஏற்படுத்தாது இங்கே மாற்றியிருக்கிறார்கள் என்பதும் ஒன்றாகும். இருக்கக்கூடிய பொது நிபந்தனைகளை நிறைவேற்றித்தர பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்தவர்கள் முன்வந்தால் இந்தப் பள்ளிக்கு அங்கிகாரம் அளிப்பதிலும் சங்கடம் இருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளம்

***119. வின—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர்களுக்கு முதல் தேதி சம்பளம் கிடைப்பது போல் பஞ்சாயத்து யூனியன் பாடசாலைகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும் மாதம் முதல் தேதியே சம்பளம் கிடைக்க அரசு ஆவன செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசு இதற்கென தனிக்குழு ஒன்று அமைத்து பரிசிலனை செய்து வருகிறது. பஞ்சாயத்து யூனியன் பாடசாலைகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு 1—1—1972-லிருந்து முதல் தேதியே சம்பளம் வழங்க ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித் துறை 11—10—1971 அன்று ஆணை பிறப்பித்து உள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : 1—1—1972-இல் இருந்து ஆசிரியர்களுக்கு முதல் தேதியே சம்பளம் வழங்க அரசு ஆணை பிறப்பித்திருந்தாலும் இடையில் ஏற்பட்ட சில சிரமங்களை உத்தேசித்து அதை மாற்றிக்கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஏற்கனவே ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளர் ஆசிரியர்களுக்குக் குறிப்பிட்ட தேதியில் சம்பளம் வழங்க தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார். நிதிப்பற்றாக்குறை காரணமாக முதல் தேதியே அவர்களுக்குச் சம்பளம் போய்ச் சேராமல் இருந்தது. அந்தக் குறைபாட்டைப்போக்க டிரஷரியில் இருந்து முதல் தேதியே அவர்களுக்குச் சம்பளம் வழங்கிவிடலாம் என்றும், பின்னர் ஊராட்சி ஒன்றியத்திற்கு அளிக்கும் பணத்தில், பிடித்துக்கொள்ளலாம், புக் அக்கவுண்டாக மாற்றிக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. இன்றைக்கு அதுபோன்ற விஷயங்களைப் பரிசீலித்து ஒரு முடிவு எடுப்பதற்குள்ளாகவே 1—1—1972-இல் இருந்து அவர்களுக்கு டிரஷரியில் இருந்து நேராகச் சம்பளம் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் பயிற்சி

*120. **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பி.டி. ஆசிரியர் பயிற்சியில் சேர விண்ணப்பிக்கும்போது ஆசிரியராகப் பணியாற்றிய முன் அனுபவம் கேட்கப்படுகின்றதா?

(இ) ஆம் எனில், இந்நிபந்தனையை எடுத்துவிட செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மொத்த இடங்களில் 80 விழுக்காடு ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்களுக்கு ஒதுக்கிவைக்கப்படுகின்றன. எஞ்சிய 20 விழுக்காடு இடங்கள் ஓராண்டுக்குக் குறைவாக அனுபவம் உள்ளவர்களுக்கும் அல்லது அனுபவமே இல்லாதவர்களுக்கும் ஒதுக்கி வைக்கப்படுகின்றன.

(இ) இல்லை.